# சுல்தானுல் ஆரிபீன் அஸ் ஸெய்யித் அஹ்மத் கபீர் அர்ரிபாயி
(கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்)

எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே புகழ் அனைத்தும், ஸலாத்தும் ஸலாமும் காதமுன் நபிய்யீன், செய்யிதுல் கௌனைன் முஹம்மது நபி ﷺ அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், நற்றவத்தோழர்கள், நல்லடியார்கள், வலிமார்கள் மீதும் என்றென்றும் உண்டாவதாக. ஆமீன்.

செயல்களில் பேணுதலையும் உள்ளங்களில் தூய்மையையும் வலியுறுத்திக்கொண்டிருக்கும் தஸவ்வுப் எனும் ஆன்மீக வழிமுறையானது இஸ்லாத்திலிந்து பிரித்தெடுக்க முடியாத ஒரு பகுதியாகும். வானவர் ஜிப்ரீல் (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் மனித தோற்றத்தில் வந்து: ஈமான் என்றால் என்ன? இஸ்லாம் என்றால் என்ன? என்று நபிகள் நாயகம் ﷺ அவர்களிடம் தொடுத்த வினாக்களின் தொடரிலே இஹ்ஸான் என்றால் என்ன? என்று கேட்டபொழுது நபிகள் நாயகம் ﷺ அவர்கள் நீர் இறைவனைப் பார்ப்பதைப்போன்று வணங்கவேண்டும். அவனை உங்களால் காண முடியாவிட்டால் அவன் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்ற சிந்தனையை முன்னிறுத்தி வணங்கவேண்டும் என பதிலளித்தார்கள். இங்கு, இறைவனது லிகாவுடன் அவனை வணங்க அல்லது அவனது பார்வை எம்மை நோக்கியுள்ளது என்ற கலப்பற்ற சிந்தனையை ஒருங்கிணைத்து இறைவனை வணங்க அடியார்களை நெறிப்படுத்தி, பண்படுத்தும் ஆன்மீகக் கலையே தஸவ்வுப் என்றால் அது மிகையாது. தஸவ்வுப்புடன் இணைந்த இஸ்லாமிய பிரச்சாரங்களே உயிரோட்டமானவையாகவும், சமூகத்தில் எதிர்பார்க்கப்படும் நிலையான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியனவாகவும் அமையும். ஆகையால்தான் இஸ்லாமிய வரலாற்றிலே இஸ்லாத்தின் இருப்புக்கும், ஆன்மீக எழுச்சிக்கும் சூபித்துவ மகான்களின் பங்கு அளப்பெரியதாக காணப்படுகிறது.

நுபுவ்வத்தின் வாயல் மூடப்பட்டடதன் பின்னர் தீனுல் இஸ்லாத்தினை உலகின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்றவர்களாக சூபி மகான்களே காணப்படுகிறார்கள். வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் பெயர்குறிப்பிடும் அளவுக்கு தீன் பணியாற்றிய சில மகான்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கியாமத்து நாள் வரை இவ்வாறான இறைநேசர்கள் தோன்றி மறைந்துகொண்டே இருப்பார்கள். இவர்களுள் வலிகளின் அரசர் என வர்ணிக்கப்படும் கௌதுல் அஃழம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களை அடுத்து அப்பணியை அயராது முன்னெடுத்த மாபெரும் சூபி மகானே ஸெய்யித் அஹ்மத் கபீர் ரிபாயி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களாவார்கள். தரீக்காக்களின் வளர்ச்சியில் இவ்விரு ஷெய்குமார்களின் வகிபாகம் மட்டிடமுடியாதவையாகும். முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் காதிரிய்யா தரீகாவினை ஸ்தாபித்து மெஞ்ஞானம் போதித்தது போன்று ஸெய்யித் அஹ்மத் கபீர் ரிபாயி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் ரிபாயிய்யா தரீகா மூலம் இறைஞான வழிமுறைகளை போதித்தார்கள்.

## ஷெய்க் அவர்ளின் ஜனனமும் பரம்பரையும்

குதுபுல் அக்பர் ஷெய்க் அஹ்மத் கபீர் ரிபாயி நாயகம் அவர்கள் ஹிஜ்ரி **512** ஆம் ஆண்டு ரஜப் மாதம் வியாழக்கிழமை ஈராக்கின் பஸரா நகரத்தின் 'பதாயிஹ்' என்ற பிரதேசத்தின் 'ஹஸன்' எனும் ஊரில் ஷெய்க் அபுல் ஹஸன் அலி என்ற பெரியாருக்கும் செய்யிதா பாதிமா அம்மையார் அவர்களுக்கும் மகனாகப் பிறந்தார்கள். 'ஹஸன்' என்ற ஊர் பதாயிஹ் பிரதேசத்தில் பல சிறிய கிராமங்களை உள்ளடக்கிய 'உம்மு உபைதா' என்றழைக்கப்பட்ட ஊரில் உள்ள ஒரு கிராமம் எனக் கூறப்படுகின்றது.

இவர்களது தந்தை அபுல் ஹஸன் அலி அவர்கள் இமாம் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது நஸபு வழியில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பத்தொன்பதாவது தலைமுறையில் தோன்றியவர்கள். இவர்கள் அக்காலத்தில் நன்கு அறியப்பட்ட இறைநேசர்களுள் ஒருவராகக் காணப்பட்டார்கள்.

அதே வேளை இவர்களது தாயாரான செய்யிதா பாத்திமா அல்அன்ஸாரிய்யா அவர்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்ஸாரித்தோழரான அபூ அய்யூபில் அன்ஸாரி அவர்களது பரம்பரையைச் சேர்ந்தவர்களாகும். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத்து சென்றபோது அவர்களது ஒட்டகை அபூ அய்யூபில் அன்ஸாரி அவர்களது வீட்டிலேயே தரித்து நின்றமை இங்கு ஞாபகமீட்டப்படவேண்டிய வரலாறாகும்.

## அற்புதங்கள் நிறைந்த குழந்தை

வல்ல நாயன் அல்லாஹ் தஆலா சில இறைநேசர்களை அவர்கள் தோன்றுவதற்கு முன்னரே கண்ணியப்படுத்துவான். அந்த அடிப்படையில் ஷெய்க் அஹ்மத் கபீர் ரிபாயி நாயகம் அவர்கள் பிறப்பதற்கு முன்னரே அற்புதங்கள் பல நிகழ்ந்ததாக அவர்களது சீராவிலே காணக்கிடைக்கின்றது. ஷெய்க் அவர்கள் பிறப்பதற்கு முன்னர் அவர்களது மாமா ஷெய்க் மன்சூர் அல்பதாயிஹி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களிடத்தில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கனவில் தோண்றி உங்களது சகோதரிக்கு இன்னும் நாற்பது நாட்களில் ஒரு ஆண் குழந்தை பிறக்க இருக்கின்றது. அவரது பெயர் 'ஷெய்க் அஹ்மத் கபீர்' என்றும் வலிமர்களில் தலையாயவராக அவர் காணப்படுவார் எனவும் குறிப்பிட்டு ஷெய்க் அவர்களது அஸ்ராருகளையும், மாண்புகளையும் முன்னறிவிப்பு செய்தார்கள். மாதத்திரமன்றி வயிற்றில் இருக்கும்போதே தாயாருக்கு ஸலாம் சொல்லக்கூடியவர்களாகவும், அவர்கள் தும்மி 'அல்ஹம்துலில்லாஹ்' என்றால் ஷெய்க அவர்கள் வயிற்றில் இருந்துகொண்டே அதன் ஜவாபாக 'யர்ஹமுகல்லாஹ்' என்று கூறுபவர்களாகவும் இருந்ததாக அவர்களது சரித்திரம் கூறும் பல்வேறு ரிவாயத்துகளிலும் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. அது மாத்திரமன்றி பச்சிளம் பாலகனாக இருந்த காலங்களில் தனது தாய் வுழுவுடன் இருக்கின்ற போதே தாய்பால் அருந்தக்கூடியவர்களாகவும் ஷெய்க் அஹ்மத் கபீர் நாயகம் காணப்பட்டார்கள். (அஷ்ஷெய்க அஹ்மத் பரீத் அல் மஸீதி: அபுல் அலமைன் அல் குதுபுல் கபீர் அஸ்ஸெய்யித் அஹ்மத் கபீர் அர்ரிபாயி...)

## ஷெய்க் அவர்ளின் கல்வியும் ஆன்மீகவழியும்

தங்களது ஏழாவது வயதில் தந்தையை இழந்த ஷெய்க் அவர்கள் அவர்களது மாமாவும் ரிபாயி கிளையாரில் வந்த பெரும் மகான்களில் ஒருவருமான ஷெய்க் மன்சூர் அல்பதாயிஹி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களது பராமரிப்பிலே வளாந்தார்கள். சிறு பராயத்திலேயே குர்ஆன் முழுவதையும் மனனம் செய்தார்கள். பின்னர் ஷெய்க் அவர்கள் இல்மு ஞானம் கற்பதற்காக அக்காலத்தில் பெரும் அறிஞராகவும் இறைநேசர்களுள் ஒருவராகவும் காணப்பட்ட ஷெய்க் அலி அபுல் பழ்ல் அல் வாஸிதி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களிடம் சென்றார்கள். அங்கு சுமார் இருபது ஆண்டுகள் மார்க்க ஞானங்கள் கற்று அக்காலத்தில் இவர்களை விட பெரியதோர் அறிஞர் இல்லை என கூறுமளவு ஷரீஅத்தின் சகல துறைகளிளும் தேர்ச்சிபெற்றார்கள். பின்னர், அவர்களது குரு ஷெய்க் அலி அபுல் பழ்ல் அல் வாஸிதி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் ரிபாய் நாயகம் அவர்களுக்கு ஷரீஅத் தரீகத் ஆகிய இரு பாதைகளையும் போதிப்பதற்கான அனுமதியையும் (இஜாஸத்) வழங்கினார்கள். இவ்வாறு ஷரீஅத், தரீகத் ஆகிய இரண்டிலும் ஷெய்க் அவர்களிடம் காணப்பட்ட ஆழமான அறிவும் பேணுதலுமே "அபுல் அலமைன்" இஸ்லாத்தின் இரு 'அடையாளங்களினதும் (ஷரீஅத், தரீகத்) தந்தை' என்ற புனைப்பெயரால் ஷெய்க் அவர்கள் அழைக்கப்படக் காரணயமாயின. அதனைத் தொடர்ந்து அவர்களது புகழ் உலகமெங்கும் பரவ ஆரம்பித்தது. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஷெய்க் அவர்களிடம் சூபி ஞானம் கற்க படையெடுத்தனர். இக்கால கட்டத்திலே தனது மாமா ஷெய்க் மன்சூர் அல்பதாயிஹி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களின் இஜாஸத்தும் கிலாபத்துதும் ஷெய்க அஹ்மத் கபீர் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களுக்குக் கிடைத்தது.

## ஷெய்க் அவர்ளின் கராமத்துகள்

தனது நேசர்களான வலிமார்களுக்கு அல்லாஹ் தஆலா பல விதமான அற்புதங்களையும் அந்தஸ்த்துக்களையும் வழங்குவான் என்பது அல்குர்ஆன் சுன்னா மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். வலிமார்களின் அற்புதங்களைக் கூறும் பல சம்பவங்களை அல்குர்ஆன் பிரஸ்தாபிக்கின்றது. நபி சுலைமான் (அலை) அவர்களது சரித்திரத்தில் பல்கீஸ் ராணியின் சிம்மாசனத்தை கண்மூடித் திறப்பத்றகுள் கொண்டு வந்த இறைநேசர் ஆஸிப் பின் பல்கிய்யா (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களது வரலாறு அல் குர்ஆன் கூறிக்கொண்டிருக்கும் வலிமார்களின் கராமத்துக்களுக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

அந்த வகையில் ரிபாய் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களுக்கு வல்ல நாயன் ஏராளமான கராமத்துக்களை வழங்கியருந்தான். அவற்றுள் மனிதன் அல்லாத ஏனைய உயிரனங்களுடன் பேசுதல், தீங்கு விளைவிக்கக்கூடிய விலங்குகளைக்கூட வசப்படுத்திக்கொள்ளல், உயிரைப் பறிக்கும் கூரிய ஆயுதங்கள், விஷ ஜந்துக்கள் இவர்களைத் தீண்டாமை என்பன ரிபாயிய்யாக்களுக்கே உரிய கராமத்துக்கள் என்று கூறுமளவுக்கு ரிபாயிய்யா ஷெய்குமார்களிடத்தில் பிரபல்யமானவையாகக் காணப்படுகின்றன.

இதற்கு அடிப்படைக்காரணம் அவர்களிடம் காணப்பட்ட இறைவனது அனுமதியின்றி அனுவும் அசையாது என்ற உறுதியும் அவனது இராதத்து இல்லாது விடின் இவ்வுலகமும் உலகாயுத காரணிகளும் வெறுமையாகிடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுமே என்றால் அது மிகையாகாது. துப்பாக்கி ரவைகளோ, கூரிய வாளோ, கத்தியோ, கொடிய மிருகங்களோ எவையாகினும் இறைவன் நாடினாலன்றி எவ்வித தீங்கையும் இழைத்துவிட முடியாது என்ற திடகாத்திரமான ஈமானின் பொருட்டால் உருவானதே இக்கராமத்துக்களாகும். இவ்வாறாக பக்குவப்பட்ட நிலையில் இருந்த நபித்தோழர் காலித் பின் வலீத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்று கூறி நஞ்சை அருந்தியபோது அவர்களுக்கு அது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை (பத்ஹுல் பாரி பாகம் **10**, பக்கம் **248**) ஆதாராப்பூர்வமான வரலாறாகும். எனவே ஈமானிய உறுதியும், ஆன்மீக பலமும் பொருந்திய மேன்மக்களான இறைநேசர்களுக்கு வல்ல ஏகன் அல்லாஹ் தஆலா வழங்கும் அற்புத சக்திகளின் வெளிப்பாடே இவ்வாறான கராமத்துகளாகும்.

ஆகையால்தான் "தனது நேசரான அஹ்மத் கபீர் றிபாய் நாயகத்துக்கு வல்லோன் அல்லாஹ் இரும்பையும் துரும்பையும் வசப்படுத்திக்கொள்ளும் ஆற்றலைக் கொடுத்திருந்தான்" என எமது மஷாயிகுமார்கள் கூற நாம் செவியுற்றிருக்கிறோம். றிபாய் ராதிபுகளில் காணப்படும் 'தௌஸ் குத்து' ராதிப் என்ற ஒரு முறையும் றிபாய் நாயகத்தின் மேற்சொன்ன கராமத்தின் வெளிப்பாடே அன்றி வேறில்லை. றிபாய் தரீக்காவின் வழி வந்த ஒரு ஷெய்கின் அல்லது ஷெய்கிடம் இஜாஸா பெற்றவர்களின் கண்காணிப்பிலேயே இவ்வாறான ராதிபுகள் இடம்பெறுகின்றன. ஆனால் எம்மைப்போன்ற ஈமானில் பலவீனமான சாதாரண மக்களுக்கு இவை சாத்தியமற்றவையும் இவற்றை முயற்சிப்பது அறியாமையுமாகும்.

ஹிஜ்ரி 555 இல் ஷெய்க் அஹ்மத் கபீர் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் தங்களது 48 ஆவது வயதில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஸியாரத்து செய்தபோது இடம்பெற்ற அற்புத நிகழ்வு கேட்போரை மெய்சிலிர்க்கவைக்கும் பிரபல்யமான கராமத்தாகும். தங்களது பாட்டனார் மீது அளவிலா அன்புகொண்டிருந்த ஷெய்கு அவர்கள் மதீனத்து மன்னை மிதித்ததுமே யா றஸூலல்லாஹ்! யா றஸூலல்லாஹ்! என அழைத்தவாறே றவ்ழா ஷரீபை நோக்கி விரைந்தார்கள். நபிகளாரின் கப்ரைக் கண்டதும் தன் அகத்தில் குடிகொண்ட வெகு நாள்காதலரை புறக்கண்களால் கண்ட பூரிப்பில் கண்கள் குளமாகி, சிரம் தரைநோக்க, சிறு கனம் மௌனியாகி, மறுகனமே குரல் பலமாகி அஸ்ஸலாமு அலைக்கும் யா ஜத்தீ (எனது பாட்டனாரே) எனக்கூற வஅலைக்குமுஸ்ஸலாம் யா வலதீ (எனது பேரனே) என்று நபிகளாரின் கப்ரிலிருந்து பதில் ஒலித்தது. அன்னலாரின் முத்தான மொழி கேட்டு ஆனந்த பரவசத்தில் உள்ளம் உருகி தேகமெங்கும் காருன்யரின் காதல் படர்ந்து மலர இவ்வாறு பாடினார்கள்.

فِيْ حَالَةِ البُعْدِ رُوْحِيْ كُنْتُ أُرسِلُها ۞ تُقَبِلُ الْأَرْضَ عَنِّيْ وَهِيَ نَائِبَتِيْ

وَهذِهِ دَوْلَةُ الْأَشْبَاحِ قَدْ حَضَرَتْ ۞ فَامْدُدْ يَمِيْنَكَ كَيْ تَحْظَى بِهَا شَفَتِيْ

நான் தொலைவில் இருக்கையில் உங்களது கப்ரை முத்தமிட
எனதுயிரை உங்களிடம் அனுப்பிக்கொண்டிருந்தேன்.
அந்த உயிர் உடலோடு இப்போது உங்கள் சமூகம் வந்திருக்கிறது
தாங்கள் வலக்கரத்தை நீட்டித்தாருங்கள் நாயகமே!
எனது உதடுகள் அதனை முத்தமிட்டு கொள்ளட்டும்.

இக்கவிதையினை ஷெய்க் அவர்கள் பாடிமுடிக்க மின்னல் ஒன்று பளீரென்று தென்பட்டது போல் நபிகளாரின் புனித கப்ரிலிருந்து அவர்களது பொற்கரம் வெளியாக றிபாயி நாயகம் அவர்கள் அதனை மனதார தொட்டுத் தழுவி முத்தமிட்டு கண்ணீர் வடித்தார்கள்.
இவ்வற்புதம் அரங்கேறும் போது கௌதுல் அஃழம் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் உட்பட சுமார் ஆயிரக்கணக்கான இறைநேசர்களும் மேன்மக்களும் அங்கு தரிசனமாகியிருந்து அக்காட்சியை கண்குளிரக் கண்டனர் என்பது பல்வேறு றிவாயத்துகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பரவலான கராமத்தாகும்.

இவ்வாறு, இறைவன் அவர்களுக்கு வழங்கிய சக்தியினால் அற்புதங்கள் பல நிகழ்த்தி ஷரஅத்திலும் தரீகத்திலும் தந்நிகரற்று விளங்கி, றிபாயிய்யா தரீகாவை உலகமெங்கும் பரவச் செய்த மாபெரும் குதுபாக சுல்தானுல் ஆரிபீன் அஹ்மத் கபீர் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் காணப்படுகிறார்கள். குதுபு அவர்கள் ஹிஜ்ரி 578 அல் ஜமாதுல் ஊலா பிறை 12 இல் பொய்யுரை விட்டு மெய்யூர் பயணமானார்கள். அவர்கள் இறையடி சேர்ந்த நாளிலேயே அவர்களது உரூஸ் முபாரக் அனுஷ்டிக்கப்படுகிறது. எல்லாம் வல்ல நாயன் அவனது நேசர் சுல்தானுல் ஆரிபீன் ஷெய்க் அஹ்மத் கபீர் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்கள் பொருட்டால் எம்பிழைகள் பொறுத்து எமது சகல ஹலாலான நாட்டங்களையும் நிறைவேற்றியருள்வானாக. ஆமீன்.

இவ்வண்ணம்

خَادِمُ الغَوْثِيَّةْ

காதிமுல் கௌஸிய்யாஹ்

28.12.2020